# புதிய ஏற்பாட்டு கடிதங்கள்

**சபைகளுக்கும் அதன் தலைவர்களுக்கும் அறிவுரை கூற அப்போஸ்தலர்கள் கடிதங்கள் எழுதினர்**


சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் L2b யை வாசிக்கவும்

## 1. ஜெபத்தாலும் தேவ வார்த்தையாலும் உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்

ஜெபம் : கர்த்தராகிய இயேசுவே! “நீர் உமது மக்களை மிகவும் நேசிக்கிறீர். உமது அப்போஸ்தலர்கள் எழுதிய கடிதங்களைப் புரிந்து கொண்டு அதற்கு அவர்கள் கீழ்ப்படிய விரும்புகிறீர். அவர்களுக்கு நான் உதவி செய்ய கிருபை அருளும். ஆமென்.”

இயேசுவின் அப்போஸ்தலர்களில் தெரிந்து கொள்ளப்பட்ட ஐந்து பேர் விசுவாசிகளுக்கும் அவர்களுடைய தலைவர்களுக்கும் கடிதங்கள் எழுதினர். அவைகள் வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த அப்போஸ்தலர்கள் யாக்கோபு, பேதுரு, யோவான், யூதா, பவுல். அனைவரும் இயேசுவைக் கண்டவர்கள். அவர்கள் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இவற்றை எழுதினர். அவர்களுடைய கடிதங்கள் நிருபங்கள் என்றும் அழைக்கப்படும்.



**யாக்கோபு :** இயேசுவின் ஒரு சகோதரன். விசுவாசியாகி, எருசலேமில் உள்ள விசுவாசிகளை வழிநடத்தினார். ரோம சாம்ராஜ்யம் எங்கும் சிதறிக் கிடந்த இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்திலும் இருந்த யூத கிறிஸ்தவர்களுக்கு அவர் தமது கடிதத்தை எழுதினார். திருவசனத்தை கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று யாக்கோபு 1:22 ல் அவர் கூறுவதைக் காண்க.

**பேதுரு :** மீன் பிடிக்கும் தொழிலை விட்டு வரும்படி இயேசு கூறியபோது சீஷராக மாறினார். பொது மன்றத்தில் இயேசுவை மறுதலித்த பேதுரு, பின் மனமாறி, எருசலேமில் இருந்த விசுவாசிகளை யாக்கோபோடு சேர்ந்து வழி நடத்தினார். அவர் ரோம சாம்ராஜ்யத்தின் பல பகுதிகளிலும் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு, பாடுகளின் மத்தியிலும் விசுவாசத்தை கைவிடாது இருக்குமாறு நினைவுறுத்தி 1 பேதுரு, 2 பேதுரு ஆகிய நிருபங்களை எழுதினார். இயேசுவுக்காகப் பாடனுபவிப்பவர்களுக்கு தேவன் வாக்கருளியுள்ளது என்ன என்பதை 1 பேதுரு 5:10 ல் காண்க.

**யோவான் :** இயேசு அழைக்கும் வரை யோவான் ஸ்நானகனின் ஒரு சீஷராய் இருந்தவர். அவர் இயேசுவை மிகவும் நேசித்தார். தேவனிடமும் பிறரிடமும் அன்பு கூரும்படி அவர் மற்றவர்களை ஊக்கப்படுத்தினார். அவர் 1 யோவானை எல்லா கிறிஸ்தவர்களுக்காகவும் எழுதினார். 2, 3 யோவானை சபைத் தலைவர்களுக்கு எழுதினார். தமது முதல் கடிதத்தை எழுதியதற்கான காரணத்தை 1 யோவான் 1:4, 5:13 ல் காண்க.

**யூதா :** யாக்கோபைப் போல, இயேசுவின் இன்னொரு சகோதரர். எருசலேமில் ஒரு தலைவராக இருந்தார். கள்ளப் போதகர்கள் விசுவாசிகளை ஏமாற்றி, சிலரை தீய பழக்கவழக்கங்களில் நடத்துவதைக் குறித்து எச்சரிக்க தமது கடிதத்தை எழுதினார். யூதா 1:3 ல் அவர் இக் கடிதத்தை எழுதிய நோக்கத்தைக் காண்க.


**பவுல் :** (தர்சு பட்டிணத்தானாகிய சவுல்). ஒரு தரிசனத்தின் மூலமாக இயேசு பவுலை ஓர் அப்போஸ்தலனாக நியமித்தார். ரோம சாம்ராஜ்யத்தின் பல பட்டிணங்களில் இருந்த யூதரல்லாத மக்களிடம் இயேசு அவரை அனுப்பினார். பவுல், ரோமர், கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர்,

கொலோசெயர், தெசலோனியருக்கு எழுதிய கடிதங்களும், புதிய தலைவர்களான பிலோமோன், தீமோத்தேயு, தீத்து ஆகியோருக்கு எழுதியவைகளும் புதிய ஏற்பாட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டு மிருக பலிக்கு திரும்பி விடாமல், மேசியாவாகிய இயேசுவை விசுவாசித்து வரும்படி எபிரேயருக்கு பவுல் கடிதம் எழுதி இருக்கலாம். கொரிந்தியருக்கு எழுதியதற்கான காரணத்தை 1 கொரி. 4:14 ல் காண்க.

பலரும் வாசிக்க அறிந்திருந்த **கிரேக்க மொழி**யிலேயே அப்போஸ்தலர்கள் எழுதினர். அவர்கள் எழுதிய பிற கடிதங்கள் புதிய ஏற்பாட்டில் சேர்க்கப்படவில்லை. விசுவாசிகள் அப்போஸ்-தலர்களின் கடிதங்களை நகல் எடுத்துப் பிறருக்கு அனுப்பினர் (கொலோ. 4:16).

## 2. வரும் வாரத்திற்கான நடவடிக்கைகளை உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

- நீங்கள் அடிக்கடி சென்று சந்திக்க முடியாத விசுவாசிகளையும் சபைகளையும் பற்றி ஒரு பட்டியல் தயார்படுத்துக.
- உங்களிடம் இருந்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதைப் பற்றி கலந்துரையாடவும்
- ஒவ்வொருவருக்காகவும் ஜெபிக்கவும்
- பவுலைப் போல, அவர்களை ஊக்கப்படுத்தி கடிதம் எழுதவும். நீங்கள் யாவரும் அதில் கையொப்பம் இடுங்கள்.



## 3. வரும் ஆராதனை வேளைக்காக உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடுங்கள்.

நிரூபங்கள் எழுதப்பட்ட காரணங்களை (பகுதி 1 ல் பட்டியலிடப்பட்டுள்ளது) விளக்கவும். கிறிஸ்தவர்கள் இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவது போலவே அப்போஸ்தலர்களின் கற்பனைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்பதை **விளக்கவும்.**

நிரூபங்களில் இருந்து சிறந்த வசனங்களை விசுவாசிகள் **ஒப்புவிக்கலாம்.**

**சிறுவர்கள்** தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை, கேள்விகளை வழங்கலாம்.

பவுல் நிரூபங்களை எழுதிய பட்டிணங்களின் வரைபடத்தை காட்டலாம்



ஐந்து பெரியவர்கள் யாக்கோபு, பேதுரு, யோவான், யூதா, பவுல் ஆகியோராக தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, பகுதி 1 ல் கூறப்பட்டுள்ள உண்மைகளை விவரிக்கலாம் (அறிமுகம் கீழே தரப்பட்டுள்ளது).

**யாக்கோபு :** என் பெயர் யாக்கோபு. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமும் சதையுமான சகோதரன். எருசலேமில் உள்ள விசுவாசிகளின் ஒரு கண்காணியாக நான் பணியாற்றினேன். யூத விசுவாசிகளிடம் ஒரு தொடர்ந்த போராட்டம் நடந்தது. ஏனெனில் அவர்கள் விலைமதிக்க முடியாத நமது கர்த்தரின் புதிய உடன்படிக்கையின் கிருபையை நம்பாமல், பழைய ஏற்பாட்டு பிரமாணங்களுக்குள் மறுபடியும் போக விரும்பினர்.

**பேதுரு:** நான்தான் பேதுரு. நான் மீன் பிடிப்பவனாக இருந்தேன். வாக்களிக்கப்பட்ட மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களை இயேசு நிறைவேற்றியதைக் கண்டேன். செசரா பட்டிணத்தில் யூதர் அல்லாத விசுவாசிகள் மேல் பரிசுத்த ஆவி இறங்கியதைக் கண்டேன். அது அற்புதமாக இருந்தது. எனினும், எருசலேமில் இருந்த யூதர்களின் மத்தியில் அது தீவிரமான கேள்விகளை எழுப்பியது.

**யோவான் :** நான் யோவான். நான் பார்த்த விஷயங்களை எல்லா மக்களும் நிச்சயம் என தெரிந்து கொள்ள எழுதினேன். ஞானஸ்நானம் பெற்ற உடன் பரிசுத்த ஆவியானவர். ஒரு புறாவைப் போல இயேசுவின் மேல் இறங்கியதையும், வானத்தில் பிதாவின் குரல் இடி முழக்கம் போல் ஒலித்ததையும் கேட்டேன். அவர் உயிர்த்தெழுந்த பின் கண்ணால் கண்டேன்.

**யூதா :** நான் யூதா. நான் இயேசுவின் சகோதரன். கலிலேயாவில் அவருடன் நான் ஒன்றாக வளர்ந்தேன். அவர் முதன் முதலில் அற்புதங்களை செய்த போது நான் ஆச்சரியம் அடைந்தேன். நாசரேத்தில் உள்ள பல மக்களைப் போல அதை நம்ப எனக்கும் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் அவர் சொல்வதையும் செய்வதையும் வைத்து சீக்கிரமாக அவர் தேவனுடைய குமாரன் என்று அறிந்து கொண்டேன்.

**பவுல் :** நான்தான் அப்போஸ்தலனாகிய பவுல். நான் ஒரு பரிசேயனாக இருந்து கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களை வெறுத்தேன். அவர்களைக் கொடூரமாகப் பாடுபடுத்தினேன் - தமஸ்குவிற்குப் போகும் வழியில் இயேசு தம்மை எனக்கு வெளிப்படுத்தும் வரை. அவரை மகிமை பொருந்திய கோலத்தில் பார்த்ததால் பல நாட்கள் குருடனாக இருந்தேன். இப்போது அவரை மட்டுமே சேவிக்கிறேன்.

**கர்த்தரின் பந்தியை ஆசரிக்க** 1 யோவான் 1:7-10 ஐ வாசிக்கவும். கர்த்தரின் பந்தியை எடுப்பதற்கு முன், நாம் நமது பாவங்களை உண்மையாய் ஒரே பரிசுத்தராகிய தேவனுக்கு அறிக்கை இடுகிறோம், என்பதை விளக்குக. வல்லமையான சுத்தப்படுத்தும் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே அவர் நமது பாவங்களைக் கழுவுகிறார் என்பதை அறிந்திருக்கிறோம்.

அப்போஸ்தலர்களுடைய கடிதங்களின் போதனையைப் பின்பற்றுவதினால் தங்களுடைய வாழ்க்கை எவ்வாறு ஆசீர்வாதமாக மாறியது என்பது பற்றி துதியோடு கூடிய சாட்சிகளை விசுவாசிகள் தரட்டும்.

1 யோவான். 2:12-13 யாவரும் **மனனம் செய்க.** இரண்டு அல்லது மூன்றுபேர் கொண்ட **குழுவாகக்** கூடி, புதிய ஏற்பாட்டு நிரூபங்களில் இருந்து கற்றுக் கொண்ட சத்தியங்களை விவாதித்து, ஜெபித்து, செயல் திட்டங்களை உறுதிப்படுத்தி, ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net